# மாற்றுத் திறனாளி சிறுமியின், 'ஏழாம் (1)

## தேதி சொன்னால் காலண்டர் பார்க்காமல்

## கிழமையை உடனே சொல்லும் அதிசயம்

திருச்சி, ஜன. 26-
கடந்தாண்டு மே மாதம் 4ம் தேதி என்ன கிழமை என்று கேட்டால், 'புதன் கிழமை' என்று பளிச்சென்று சொல்லி, திருச்சியை சேர்ந்த மாற்றுத் திறனாளி சிறுமி நம்மை ஆச்சர்யப்பட வைக்கிறார்.

கடந்தாண்டு மே மாதம் 4ம் தேதி, என்ன கிழமை என்று கேட்டால், நாம் அனைவரும் காலண்டரை புரட்டுவோம். அல்லது மொபைல் போனில் உள்ள காலண்டரை பார்ப்போம். ஆனால், திருச்சியை சேர்ந்த மாற்றுத் திறனாளி சிறுமி பிரியங்காவிடம், 2010, 2011, 2012, 2013 ஆகிய நான்கு ஆண்டுகளில் மாதம், தேதியை குறிப்பிட்டு கேட்டால், சரியான கிழமைகளைச் சொல்லி அசத்துகிறார்.

திருச்சி, தீரன்நகரை சேர்ந்தவர் கண்ணன், 47; சென்னையில், செக்யூரிட்டி கார்டாக வேலை பார்க்கிறார். இவரது மனைவி பானு; உறையூர் சிவாலயா பாலானந்தா பள்ளியில் சிறப்பு குழந்தைகளை கவனித்துக் கொள்ளும், 'கேர் டேக்கராக' வேலை பார்க்கிறார். இவர்களது மகள் பிரியங்கா, 11. புத்தூர் நால் ரோட்டில் உள்ள ஆல்-சைன்ட்ஸ் பள்ளியில், ஐந்தாம் வகுப்பு படிக்கிறார்.


பிரியங்கா

பிரியங்காவுக்கு, மற்ற குழந்தைகளை காட்டிலும் தனித்திறன் உள்ளது. பிரியங்கா பிறக்கும் போது, மாறுகண் ஏற்பட்டது. இடது கை செயல்படவில்லை. இடது கால் வளர்ச்சி குன்றி காணப்பட்டது. அவர் வளர்ந்த பிறகு சற்று திக்கி... திக்கித் தான் பேசினார். மனம் தளராத தாய் பானு, குழந்தையை கண்ணும் கருத்துமாக பார்த்துக்கொண்டார்.

கடந்தாண்டு ஜூலை 10ம் தேதி இரவு 11 மணிக்கு அவரது தாய் பானு, 'ஆகஸ்ட் 13ம் தேதி 'லீவு' போடணும். 'லீவு' கிடைக்குதா? என்னானு தெரியலை' என்று புலம்பிக்கொண்டிருந்தார். அப்போது, பிரியங்கா, 'ஆகஸ்ட் 13ம் தேதி சனிக்கிழமை உனக்கு 'லீவு' தானே அம்மா?' என்று சாதாரணமாக கூறியுள்ளார். இதைக் கேட்ட பானு, காலண்டரை புரட்டி பார்த்து, ஆச்சர்யமானார். சிறுமி சொன்னது சரியாக இருந்தது.

இதுகுறித்து பிரியங்காவின் தாய் பானு கூறியதாவது:

பிரியங்காவுக்கு இப்படி ஒரு, 'சூப்பர் ப்வர்' இருப்பது, கடந்தாண்டு ஜூலை 10ம் தேதி தான் தெரியும். 2010, 2011, 2012, 2013 ஆகிய ஆண்டுகளில் எந்த மாதம், தேதியை குறிப்பிட்டு கேட்டாலும் சரியாக கிழமையை சொல்லிவிடுவாள். அதேபோல், குறிப்பிட்ட மாதத்தில் எந்தெந்த தேதியில் எத்தனை முறை ஒரே கிழமை வருகிறது என்று கேட்டாலும் சரியாக சொல்லிவிடுவாள். ஆறு வயதுக்கு மேல் தான் நடக்க ஆரம்பித்தாள். சமீபத்தில் தான் காலில் ஆபரேஷன் செய்தோம். தற்போது ஓரளவு காலை ஊன்றி நடக்கிறாள். கை தான் இன்னும் சரியாகவில்லை.

இவ்வாறு பானு கூறினார்.

சிறுமி பிரியங்கா கூறுகையில், ''எனக்கு டியூஷன் எடுக்க வரும் ராஜாத்தி, 'மிஸ்' தான் காலண்டரை படிக்கும்படி கூறினார். அன்றிலிருந்து காலண்டரை பார்த்து படித்து பழகினேன். எந்த தேதி கேட்டாலும் சொல்வேன்,'' என்றார்.

மாற்றுத் திறனாளிகள் மிகவும் திறமையானவர்




கரூர் சேரன் கிட்ஸ் பள்ளியில், ஒன்றாம் வகுப்பு படிக்கும் மாணவி கார்த்திகா, கராத்தே பயிற்சியும் கற்றுக்கொள்கிறார். கராத்தே உடையுடன் தனது வீரத்தைக் காட்டும் வகையில், டாடா சுமோவை கயிற்றால் கட்டி இழுத்து சாதனை புரிந்தார். உள்படம்: கார்த்திகா

# டாடா சுமோவை கயிறு கட்டி இழுத்த ஒன்றாம் வகுப்பு மாணவி

கரூர், ஜன. 29-
கரூரில், டாடா சுமோவை கயிறு கட்டி இழுத்து, ஒன்றாம் வகுப்பு படிக்கும் மாணவி சாதனை புரிந்துள்ளார்.

கரூர் சேரன் மெட்ரிக் பள்ளியில் மாணவ, மாணவியரின் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடந்தது. சேரன் கிட்ஸ் பள்ளியில் ஒன்றாம் வகுப்பு மாணவி கார்த்திகா, 6. டாடா சுமோவை கயிற்றால் கட்டி இழுத்தார். அப்போது கூடியிருந்த மாணவ, மாணவியர், பெற்றோர் கைதட்டி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.மாணவி கார்த்திகா சாதனை குறித்து பயிற்சியாளர் ராமதாஸ் கூறியதாவது:

கார்த்திகா கடந்த இரண்டாண்டுகளாக கராத்தே பயிற்சி பெற்று வருகிறார். அதிக எடை கொண்ட வாகனங்களை கயிறு மூலம் பல்லால் கட்டி இழுக்க, ஆறு மாதங்களாக கார்த்திகாவுக்கு பயிற்சி கொடுக்கப்பட்டது. முதல் கட்டமாக மண் தரையில் தற்போது சாதனை செய்யப்பட்டுள்ளது.

வழக்கமாக தார் ரோடு மற்றும் சிமென்ட் ரோடுகளில் தான் அதிக எடை கொண்ட வாகனங்கள் கயிறு மூலம் இழுத்து சாதனை செய்யப்படும். மாணவி கார்த்திகா, 25 மீட்டர் தூரம் சுமோவை, மண் தரையில் இழுத்து சாதனை படைத்துள்ளார். அவரின் எடை 23 கிலோ மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு ராமதாஸ் கூறினார்.

(3) 20.1.2012.

# சாலையில் கிடந்த பணம் உரியவரிடம் ஒப்படைப்பு

புதுச்சேரி, ஜன. 20-
ரெட்டியார்பாளையம் மூகாம்பிகை நகரைச் சேர்ந்தவர் நாகராஜன். இவரது மகள் கார்த்திகா, 14; தனியார் பள்ளியில் 9ம் வகுப்பு படித்து வருகிறார். இவர், கடந்த 13ம் தேதி மாலை பள்ளி முடிந்து வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்.

மூகாம்பிகை நகரில் நடந்து சென்ற போது, கீழே பை ஒன்று கிடந்தது. அதை எடுத்து திறந்து பார்த்த போது, அதில் ஆயிரக்கணக்கில் பணம் இருந்தது. பணப்பையை, சீனியர் எஸ்.பி., சந்திரனிடம், மாணவி ஒப்படைத்தார். பணத்தைத் தவறவிட்டவர்கள், உரிய அடையாளம் மற்றும் தொகையைக் கூறி, பணப்பையைப் பெற்றுச் செல்லலாம் என்று போலீசார் அறிவித்திருந்தனர்.இந்நிலையில் நேற்று முன்தினம் மூகாம்பிகை நகரைச் சேர்ந்த சந்தானம் என்பவர், பணப்பைக்கான அடையாளம் மற்றும் தொகைகளை கூறினார்.அவரிடம் சீனியர் எஸ்.பி. சந்திரன், எஸ்.பி. நந்தகோபால், இன்ஸ்பெக்டர் மாறன் ஆகியோர் பணத்தை ஒப்படைத்தனர். மேலும், பணப்பையை எடுத்து தந்த மாணவி கார்த்திகாவின் நேர்மையை போலீசார் பாராட்டினர்.

# BELLE NOTIZIE DAL NOSTRO PAESE: INDIA
# RGHH - PONDICHERRY 2012

## 1) IL SESTO SENSO DI UNA RAGAZZA DIVERSAMENTE ABILE.

Trichy, 26 Gennaio. Se le chiedi che giorno fosse il 4 Marzo dello scorso anno, lei ti dirà "Mercoledì". Lei viene da Trichy ed è in grado di meravigliare le persone. Se qualcuno vi chiede quale giorno fosse il 4 Marzo dello scorso anno, andreste a prendere il calendario vecchio o controllereste su quello del cellulare. Lei è capace di dirvi ogni giorno del 2010, 2011, 2012 e 2013. Suo padre, Mr Kannan da Dearan Nagar, lavora a Chennai nella sicurezza, la madre Banu lavora nella scuola Sivalaya Balananda come custode. La figlia Priyanka, 11 anni, frequenta la quinta classe a Puttur, nella scuola All Saints, all'incrocio con la quarta strada. Ha un talento superiore rispetto agli altri ragazzi. Quando nacque era strabica e non muoveva la mano sinistra;le sue gambe non crescevano, balbettava. I suoi genitori si occuparono di lei.
Lo scorso 10 Luglio, alle 23, la madre disse di volersi congedare per il 13 Agosto, ma non sapeva che giorno fosse e se lo avrebbe ottenuto. Priyanka parlò senza balbettare, dicendo che il 13 Agosto sarebbe stata vacanza. Sentendo ciò la madre girò la pagina del calendario e controllò e si meravigliò perché la figlia aveva ragione. Così la madre venne a conoscenza del super potere della figlia, lo scorso 10 Luglio. La ragazza può raccontarti tutti i giorni e le date del 2011, 2012, 2013 e sicuramente se lo chiedi anche tutte quelle future. Ha iniziato a camminare solo ora, dopo un intervento. Priyanka racconta che la sua insegnante di sostegno le disse di studiare il calendario e da quel giorno lei iniziò ad impararlo. I ragazzi diversamente abili hanno molti talenti inespressi e dovremmo aiutarli a farli emergere.

## 2) LA PRIMA RAGAZZA CAMPIONESSA PER AVER TRAINATO LA TATA SUMO CAR

A Karur nella scuola di Karur Cheran, furono condotti diversi ragazzi per mostrare il loro talento. Kathik, una ragazzina di 6 anni, della scuola Cheran Kind, trainò il Tata Sumo Car con una corda. I genitori e gli studenti applaudirono gustandosi l'evento. Dopo due anni, iniziò ad allenarsi in una scuola di Karate; dopo 6 mesi si allenava a trainare il veicolo con la bocca. Solitamente solo le persone adulte avevano il record per aver trainato il pesante veicolo. Ma il record di Kathik divenne pubblico. Lei pesava solo 23 kg!

## 3) I SOLDI RINVENUTI PER STRADA FURONO RESTITUITI AL PROPRIETARIO,

Pondicherry, 20 Gennaio. Nagarajan è di Reddipalayam Mugambigai Nagar. Sua figlia Karthika, 14 anni, studia in una scuola privata nella nona classe. Il 13 Gennaio, mentre ritornava a casa dalla scuola, ritrovò una borsa. All'interno c'erano migliaia di Rupie. Kathika consegnò la borsa al commissariato, il quale cercò il proprietario per l'identificazione. Ieri da Mugambigai Nagar, il sig. Sandanam proprietario della borsa comunicò la cifra esatta e la borsa gli venne restituita dal comandante Chandiran, dal sotto tenente Nandra Kopal e dall'ispettore mr. Maran.
La polizia si e' congratulata con la studentessa per la sua onestà....